இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 09.05.2026

# இது சரிவு அல்ல...

‘திராவிடக் கட்சிகளின் ஆட்சி முடிவுக்கு வந்து விட்டது’ என்ற பொருளில் சில நாளிதழ்கள் செய்திகள் வெளியிடுவதைப் பார்க்கும் போது, அவர்களது ஆயிரங்காலத்து வன்மம் வெளிப்படுவதைப் புரிந்து கொள்ள முடிகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் பேரவைத் தலைவராகவும், அமைச்சரவையில் அமைச்சராகவும் இருந்த மரியாதைக்குரிய சி.பா.ஆதித்தனாரின் ‘தினத்தந்தி’யுமா இப்படி எழுதி பெருமைப்பட வேண்டும்?

அனைத்து வகையிலான ஆதிக்கத்துக்கும் எதிரான இயக்கம், திராவிட இயக்கம். ஆதிக்கச் சக்திகளும், அத்தகைய எண்ணங்களும் கொண்டவர்கள் கோலோச்சும் காலம் வரையில் திராவிட இயக்கம் இம்மண்ணில் இருக்கும். யாருக்கும் சந்தேகம் வேண்டாம்! அற்பத்தனமான மகிழ்ச்சிகளும் வேண்டாம்!

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஒரு தேர்தல் வெற்றியால் வளர்ந்த கட்சியும் அல்ல. ஒரு தேர்தல் தோல்வியால் முடிந்து போகப் போகும் கட்சியும் அல்ல.

1957 ஆம் ஆண்டு முதல் முறை போட்டியிட்ட தேர்தலில் 15 இடங்களைக் கைப்பற்றியது கழகம். அடுத்து 1962 தேர்தலில் 50 இடங்களைக் கைப்பற்றி சட்டமன்ற எதிர்க்கட்சியாக உயர்ந்தது. 1967 தேர்தலில் 137 இடங்களைக் கைப்பற்றி முதல்முறை ஆட்சியைக் கைப்பற்றியது கழகம்.

1967, 1971, 1989, 1996, 2006, 2021 என ஆறு முறை ஆட்சி அமைத்த கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

1977, 1980, 1984, 1991, 2001, 2011, 2016 என ஏழு முறை எதிர்க்கட்சி வரிசையில் செயல்பட்ட கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

இவைதான் அரை நூற்றாண்டு தமிழ்நாட்டின் அரசியல் வரலாறு ஆகும். வெற்றி, தோல்விகளால் அளவிடப்பட்டது அல்லது கழகம்.

தி.மு.க. என்பது எப்போதும் காவல் அரண். காவலுக்கு நிற்பவன், தமிழ்நாடு என்ற கோட்டையையும் காப்பான். கோட்டையை அழிக்கத் துடிக்கும் சக்திகளையும் வீழ்த்துவான். இந்த இரண்டு செயல்களையும் காவல் அரணாம் கழகம் செய்யும். இதைத்தான் காலம் காலமாக கழகம் செய்து வருகிறது.

**திரைக்கவர்ச்சியை உண்மையென நம்பி, ‘தாங்கள் என்ன செய்கிறோம்’ என்பதே தெரியாமல் விஜய் கட்சிக்கு வாக்குகள் அதிகம் ஆகி இருக்கிறது. அவரது அரசியலுக்காக அல்ல. அவரது கொள்கைக்காக அல்ல. தி.மு.க.வுக்கு எதிராக அல்ல. கழக ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பு அலை என்பது இல்லை. நமது வேட்பாளர்கள், பரப்புரை போன இடத்தில் எங்கும் தடுக்கப்படவில்லை. எதிர்ப்புகள் இல்லை. இருப்பினும் விஜய் கட்சி அதிக வாக்குகளை வாங்கியது என்றால், அதற்கு அவரது சினிமா புகழ் மட்டுமே காரணம் ஆகும். கட்சி ஆரம்பித்து இரண்டு ஆண்டுகளே ஆகி இருக்கலாம். ஆனால் அவர் சினிமாவில் 25 ஆண்டுகளாக இருப்பவர். அந்த பிம்பம் ஒன்றே அவருக்கு விழுந்த வாக்குகள் ஆகும்.**

விழுப்புரம், அரியலூர், திருவாரூர், தென்காசி, நீலகிரி, நாகை, மயிலாடுதுறை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் விஜய் கட்சி வெற்றி பெற முடியவில்லை. எங்கே போனது அவரது செல்வாக்கு?

புள்ளி விபரங்களின்படி தி.மு.க. கூட்டணிக்கு 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்குகள் கிடைத்துள்ளன. விஜய் கட்சியானது தி.மு.க. கூட்டணியை விட 17.43 லட்சம் வாக்குகளை மட்டுமே கூடுதலாகப் பெற்றுள்ளது. தி.மு.க. கூட்டணிக்கும் விஜய் கட்சிக்குமான வாக்கு விழுக்காடு வேறுபாடு என்பது 3.52 விழுக்காடு மட்டுமே!

27 தொகுதிகளில் மிகக் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் தான் தி.மு.க. கூட்டணி வெற்றி வாய்ப்பை இழந்துள்ளது.

* **திருப்பத்தூர் -1**
* **கன்னியாகுமரி -214**
* **போளூர் - 227**
* **பரமத்தி வேலூர் - 308**
* **கும்பகோணம் - 679**
* **கம்பம் - 751**
* **கள்ளக்குறிச்சி - 798**
* **உதகை - 976**
* **ஸ்ரீவைகுண்டம் - 1188**
* **அந்தியூர் - 1260**
* **மணப்பாறை - 1426**
* **பழனி - 1452**
* **மானாமதுரை - 1354**
* **கரூர் -1554**
* **மன்னார்குடி -1566**
* **உசிலம்பட்டி - 1805**
* **ஏற்காடு - 2189**
* **மொடக்குறிச்சி - 2430**
* **புவனகிரி - 2487**
* **திருவாடானை - 2513**
* **சேந்தமங்கலம் - 2655**
* **சோழவந்தான் - 2678**
* **லால்குடி - 2739**
* **நிலக்கோட்டை - 2925**
* **பெண்ணாகரம் - 3165**
* **கிருஷ்ணராயபுரம் - 3617**
* **அரூர் - 3329**

**- இப்படி மிகக் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்துள்ளது தி.மு.க. கூட்டணி.**

**‘திராவிடக் கட்சி ஆட்சி முடிந்துவிட்டது’ என்று எழுதும் நாளிதழ்கள், பிரதமர் மோடியின் பா.ஜ.க. எத்தனை இடங்களில் வென்றுள்ளது என்பதைப் பட்டியல் போட்டு, ‘பா.ஜ.க. முழுமையாகப் புதைக்கப்பட்டு விட்டது’ என்று எழுதினார்களா என்றால் இல்லை.**


27 இடங்களில் போட்டியிட்ட பா.ஜ.க., உதகமண்டலம் தொகுதியில் மட்டும் வென்றுள்ளது. அதுவும் 976 வாக்குகள் வித்தியாசத்தில்தான் வென்றுள்ளது. மற்ற பா.ஜ.க. தலைகள் அனைத்தும் வீழ்த்தப்பட்டுள்ளது. முந்தைய தேர்தலில் 4 இடங்களில் வென்ற பா.ஜ.க., இப்போது அதில் மூன்று இடங்களை இழந்துள்ளது. இதற்குப் பொறுப்பேற்க வேண்டியது பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் அல்லவா?

## தி.மு.க. அரசின் நலத்திட்டங்களைத் தொடர வேண்டும்!

# விஜய் ஆட்சி அமைக்க தி.மு.க. குறுக்கே நிற்காது!

## ‘டைம்ஸ் ஆப் இந்தியா’வுக்கு - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பேட்டி!





Let Vijay form govt, won't disturb for 6 months: Stalin

Arun.Ram@timesofindia.com

Chennai: DMK will wait for TVK leader C Joseph Vijay to form the govt, and "watch without disturbing for six months", outgoing chief minister M K Stalin told TOI on Wednesday.

Indicating that DMK doesn't want a constitutional crisis or another election soon, Stalin said he expects the new govt to continue the schemes introduced by ... school children," he said when asked what tops his priority list. "And 'Kalaignar magalir urimai thogai' (₹1,000 monthly allowance to women heads of households)."

When pointed out that Vijay had promised ₹2,500 to women, Stalin said it would be difficult to keep that promise. "Give them at least ₹1,000 as we did". His ... of Centre's control. "In this election too, we promised only those things we could deliver. I don't think TVK will be able to fulfill its promises (referring to six free LPG cylinders a year to each family of ration card holders)," he said, adding, "Senjaal magizhchi (we will be happy if they do)."

The DMK president had a steady stream of visitors – former ministers and party leaders, alliance partners and

**சென்னை, மே 9-**

**“தமிழ்நாட்டில் விஜய் ஆட்சியமைக்க தி.மு.க. குறுக்கே நிற்காது” என்றும் “மக்கள் தீர்ப்பை ஏற்போம்” என்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார். “தி.மு.க. ஆட்சியின் திட்டங்களை புதிய அரசு தொடர வேண்டும்” என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.**

“டைம்ஸ் ஆஃப் இந்தியா “ஆங்கில நாளிதழுக்கு சிறப்புப் பேட்டியளித்துள்ள கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் புதிய அரசு அமைக்கும் விவகாரத்தில் அரசியலமைப்புச் சிக்கலையோ, நெருக்கடியையோ ஏற்படுத்த விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

அதேபோல், உடனடியாக மீண்டும் ஒரு தேர்தல் வருவதையும் தாங்கள் விரும்பவில்லை என்றும் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் விஜய் ஆட்சியமைக்க தி.மு.க. எந்த இடையூறும் செய்யாது என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் உள்ளிட்ட தி.மு.க. அரசு செயல்படுத்திய நலத்திட்டங்களை புதிய அரசு தொடர வேண்டும் என்றும் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

புதிதாகப் பொறுப்பேற்கும் அரசு - பள்ளி மாணவ, மாணவிகளுக்கான காலை உணவுத் திட்டத்தை தடையின்றித் தொடர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

தனது தலைமையிலான திராவிட மாடல் அரசு 90 சதவிகித தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளது என்றும், “நீட்” தேர்வு ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதால், அதனை ரத்து செய்ய முடியவில்லை என்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார் .

# 5 மாநிலங்களில் தேர்தல் நடத்தை விதிகள் முழுவதும் விலக்கிக் கொள்ளப்படுகிறது!

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி, மே 9-

தமிழ்நாடு, கேரளா, அசாம், மேற்கு வங்கம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் அமலில் இருந்த தேர்தல் நடத்தை விதிகள் திரும்பப் பெறப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அரசு புதிய திட்டங்களை அறிவிக்கவும், வழக்கமான நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளவும் இனி எந்தத் தடையும் இல்லை என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தமிழக சட்டசபை தேர்தலுக்கான ஓட்டுப்பதிவு கடந்த ஏப்.23 ல் நடைபெற்றது. இதற்கான அறிவிப்பு, மார்ச் 15ல் வெளியானது. அப்போது முதலே, தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தன. மாவட்டத்தில் எட்டு சட்டசபை தொகுதிகளுக்கான தேர்தல் பணிகள் நடைபெற்றன. வி.ஏ.ஓ.க்கள் முதல், தாசில்தார்கள், துணை கலெக்டர் நிலையிலான அதிகாரிகள், கலெக்டர் வரையிலான வருவாய்த் துறையினர் மற்றும் அனைத்து அரசு துறையினரும் வழக்கமான பணிகளை தற்காலிகமாக நிறுத்திவிட்டு, முழு வீச்சில் தேர்தல் பணிகளில் ஈடுபட்டனர்.

தொகுதிவாரியாக ஓட்டுச்சாவடிகளை தயார்படுத்துவது, வேட்பு மனுக்கள் பெறுவது, பரிசீலனை செய்வது, தேர்தல் பொருட்கள், படிவங்களை தருவித்து, அந்தந்த தொகுதிகளுக்கு அனுப்பி வைப்பது, இ.வி.எம், மெஷின்களை தயார்படுத்துவது, வாக்காளர் மத்தியில் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்துவது. ஓட்டுப்பதிவு நாள் பணிகள் என. இரவு பகல் பாராமல், விடுப்பு இன்றி தேர்தல் பணிகளில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், அசாம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கும், இடைத்தேர்தல் நடைபெற்ற குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட இதர மாநிலத் தொகுதிகளுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். நடத்தை விதிகள் திரும்பப் பெறப்பட்டுள்ளதால், புதிய நலத்திட்டங்களை அறிவித்தல், இடமாற்றம் போன்ற அரசு நிர்வாகப் பணிகள் இனி வழக்கம் போல மேற்கொள்ளப்படும்.

பறக்கும் படைகள் மற்றும் நிலை கண்காணிப்பு குழுக்கள் ஏற்கனவே திரும்பப் பெறப்பட்டுள்ளன. மேலும், பணம் கொண்டு செல்வதற்கான கட்டுப்பாடுகளும் இனி நடைமுறையில் இருக்காது. வாக்கு எண்ணிக்கை மற்றும் தேர்தல் முடிவுகள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 14 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு

# இந்தியாவில் வெகுவாகக் குறைந்த வெளிநாட்டு முதலீடு!

புதுடெல்லி, மே 9 -

இந்திய உள்நாட்டுப் பங்குச்சந்தைகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் (FPIs) முதலீடு பெரும் சரிவைச் சந்தித்துள்ளது.

2026 மார்ச் நிலவரப்படி, இது 16.13 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. இது கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத மிகக் குறைந்த அளவாகும்.

2025 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 18.9 பில்லியன் டாலர் முதலீட்டை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திரும்பப் பெற்றனர். 2026 மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய இரண்டு மாதங்களில் மட்டுமே 20.5 பில்லியன் டாலர் முதலீடு இந்தியாவை விட்டு வெளியேறியுள்ளது.

2026 ஏப்ரல் வரை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சுமார் ரூ. 1.68 டிரில்லியன் மதிப்பிலான பங்குகளை விற்றுள்ளனர். இது முந்தைய முழு ஆண்டுகளில் நடந்த விற்பனையை விட அதிகமாகும்.

ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதன் காரணமாக கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. எரிசக்தி இறக்கு மதியை அதிகம் நம்பியிருக்கும் இந்தியாவிற்கு, இந்த விலை உயர்வு நிதிப்பற்றாக் குறையை அதிகப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக பணவீக்கம் அதிகரித்துள்ளதோடு, நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலால் ஏற்பட்ட பொருளாதாரத் தயக்கம் காரணமாகவே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்தியச் சந்தையிலிருந்து தங்கள் முதலீடுகளைத் தொடர்ந்து வெளியேற்றி (திரும்பப் பெற்று) வருகின்றனர்.




நெல்லை மாவட்டம், இடையன்குடியில் தமிழறிஞர் கால்டுவெல் அவர்களின் 212 வது பிறந்த நாளினை முன்னிட்டு இடையன்குடியில் கால்டுவெல் நினைவு இல்லத்தில் அமைந்துள்ள கால்டுவெல் திருஉருவச் சிலைக்கு இராதாபுரம் மேற்கு ஒன்றியச் செயலாளர் மி.ஜோசப்பெல்சி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கப்பட்டது. நிகழ்வில் இடையன்குடி சேகர குருவானவர் அருள்திரு.துரைசிங், உதவி குருவானவர் அருள்திரு.பிரட்டிக் ஜான், நெல்லை மாவட்ட இந்து சமய அறநிலையதுறை அறங்காவலர் குழு உறுப்பினர் தி.மு.க. மாவட்டப் பிரதிநிதி சமுகை முரளி, ராதாபுரம் ஒன்றிய ஊராட்சி மன்றத் தலைவர்களின் கூட்டமைப்பு தலைவர் அனிதா பிரின்ஸ், இடையன்குடி ஊராட்சித் தலைவர் ஜேய்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.